O.S. No: 73/2017

**பெயர்: கண்ணன்**

**ம.சா. 3**

**08/12/2022**

**1, 2 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

கலியமூர்த்தி அய்யப்பனுக்கு எழுதி வைத்த உயில் தேதி 30/01/2015 ஆகும். எனக்கு கலியமூர்த்தி ஐய்யப்பன் ஆகியோரை நேரடியாகவே தெரியும். என்னுடைய தம்பி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கழித்துள்ளார் என்றால் சரிதான். உயில் எழுதும் போது அசலாம்பாள், கலியமூர்த்தி சாட்சி சிவக்குமார் மற்றும் நான் இருந்தோம். உயில் எழுதும் போது கலியமூர்த்தி உடல் நிலை சரியில்லாமல் இருந்தார். கலியமூர்த்தியிடம் 2 கிமீ தூரத்தில் தான் சார்பதிவாளர் அலுவலகம் இருக்கிறது என்றும், அங்கவே பதிவு செய்துக்கொள்ளலாம் என்றும், கும்பகோணம் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு போய் ஏன் பதிவு செய்ய வேண்டும் என்று நான் கேட்கவில்லை. நான் ஐய்யப்பன், சிவக்குமார் ஆகியோர் கலியமூர்த்தி இறந்த பிறகு பொய்யாக ஒரு உயிலை தயார் செய்தோம் என்றால் சரியல்ல. 30/01/2015 ஆம் தேதி கலியமூர்த்தி எந்த உயிலையும் எழுதி வைக்கவில்லை என்றும், நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றும், கலியமூர்த்தி போட்ட கையொப்பத்தை நான் பார்க்கவில்லை என்றும், உயிலை வழக்கறிஞர் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஐய்யப்பன் எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

**/உண்மை நகல்/**
ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

O.S. No: 73/2017

பெயர்: சிவக்குமார்

**ம.சா. 2**

**08/12/2022**

**1, 2 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் திருவிடைமருதூர் வண்ணக்குடியில் குடியிருக்கிறேன். கலியமூர்த்தி 14/03/2019 ஆம் தேதி அவர் இறந்துவிட்டார். கலியமூர்த்திக்கு எங்களுடைய சொத்திற்கு அருகே நஞ்சை திடல் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. எங்களுடைய உறவினர் யாருக்கும் நஞ்சை திடல் கிடையாது. நான் 7 ஆம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எழுத படிக்க தெரியும். 30/01/2015 ஆம் தேதி உயில் எழுதப்பட்டது. உயிலை எழுதும் போது நான், கலியமூர்த்தி, அவருடைய மனைவி, என்னுடன் சாட்சி கையொப்பம் போட்ட கண்ணன் ஆகியோர் இருந்தோம். கலியமூர்த்தி அப்போது நல்ல நடை உடையுடன் இருந்தார். அந்த உயிலை 2 கிமீ தொலைவில் உள்ள திருவிடைமருதூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஏன் பதிவு செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் கையொப்பம் போட்ட தேதியில் உயில் எழுதப்படவில்லை என்றும், நான் ம.சா.1 ஐய்யப்பன் மற்றொரு சாட்சி கண்ணன் ஆகியோர் சேர்ந்து அந்த உயிலை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஐய்யப்பன் கலியமூர்த்தியையும், அசலாம்பாளையும் அவ்வப்போது மிரட்டி உயிலை தன் பெயருக்கு எழுதி வைக்க வேண்டும் என்று கேட்டார் என்றும், அதற்கு நானும், கண்ணனும் உடந்தையாக இருந்தோம் என்றால் சரியல்ல. கலியமூர்த்தியின் சொத்துக்கள் குறித்து விவரம் முழுவதும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. கலியமூர்த்திக்கு மருத்துவக்குடியில் இருந்த நிலம் பற்றி எனக்கு தெரியாது. கலியமூர்த்தி தான் உயிருடன் இருந்த காலத்தில், மருத்துவக்குடியில் உள்ள நிலத்தை விற்பனை செய்து, தாவா சொத்தையும் விற்பனை செய்து அவருடைய இறுதி காலம் வரையில் அதன்பிறகு அவருடைய மனைவிக்கும் ஜீவிதம் செய்வதற்கு வங்கியில் சேமிப்பு கணக்கில் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. உயில் எழுதும் போது நாங்கள் கலியமூர்த்தி, அவருடைய மனைவி அசலாம்பாள், நான்,

மற்றும் சாட்சி கண்ணன் ஆகிய நான்கு பேர் மட்டும் தான் இருந்தோம். வேறு யாரும் இல்லை. உயிலை தட்டச்சு செய்தது எங்கு என்று எனக்கு தெரியாது. கும்பகோணம் ஸ்ரீநகர் காலனியில் வழக்கறிஞர் செல்வக்குமார் அலுவலகத்தில் வைத்து நான் உயிலில் கையொப்பம் போட்டேன். வழக்கறிஞர் செல்வக்குமார் கலியமூர்த்தியிடம் உயிலை படித்து காட்டினார் நாங்கள் உடன் இருந்தோம். வண்ணக்குடியில் இருந்து கும்பகோணம் 10 கிமீ தூரத்தில் இருக்கும். வண்ணிக்குடியில் இருந்து திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலகம் 1.1/2 கி.மீ தூரம் இருக்கும். செல்வக்குமார் உறவினரா என்று எனக்கு தெரியாது. ஏன் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை என்று கேட்டோம். அதற்கு அவர் வழக்கறிஞர் மூலம் எழுதிகொள்ளலாம். அதனால் நீங்கள் அங்கு வாங்கள் என்று சொன்னார். நான் ஐயப்பன், சாட்சி கண்ணன் ஆகியோர் வண்ணக்குடியில் உள்ள சொத்தை அபகரிப்பதற்காக ஆவணங்களை தயார் செய்து அவ்வப்போது வழக்குகளை தாக்கல் செய்வோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து கலியமூர்த்தியின் மனைவி அசலாம்பாள் தான் சட்டப்படியான வாரிசு என்றால் கலியமூர்த்தி தான் ஐயப்பனுக்கு உயில் எழுதி வைப்பதாக எங்களிடம் சொன்னார். ஐயப்பன் என் மனைவியை கவனித்துக்கொள்வார் என்று சொன்னார. கலியமூர்த்தி அவ்வாறு சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக கலியமூர்த்தி தான் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

**/உண்மை நகல்/**
ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

O.S. No: 73/2017

பெயர்: ஐய்யப்பன்

**ம.சா. 1**

**08/12/2022**

**1, 2 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்து போன கலியமூர்த்தி என் அத்தையின் கணவர். மாமா முறை வேண்டும். கலியமூர்த்தி 14/03/2019 ஆம் தேதி இறந்துவிட்டார். இறந்து போன கலியமூர்த்தி மனைவி அசலாம்பாள் உயிரோடு தான் இருக்கிறார். கலியமூர்த்திக்கும் அசலாம்பாளுக்கும் குழந்தை ஏதும் கிடையாது என்றால் சரிதான். கலியமூர்த்திக்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் எதுவும் கிடையாது என்றால் சரிதான். கலியமூர்த்திக்கு நரிக்குடியில் சொத்து இருந்தது என்றும், அதை அவர் உயிரோடு இருக்கும் போதே கிரயம் செய்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அதேபோல் தான் தாவா சொத்துக்களை 1, 2 பிரதிவாதிகளுக்கு கலியமூர்த்தி உயிருடன் இருந்த காலத்திலேயே கிரயம் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. உயில் 30/01/2015 ஆம் தேதி கலியமூர்த்தியால் எழுதிவைக்கப்பட்டுள்ளது. மேற்படி உயில் எங்கு வைத்து எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. கலியமூர்த்தி எழுதி வைத்த உயில் பத்திரம் அவர் இறந்த பிறகு என்னுடைய அத்தை அசலாம்பாள் சொல்லி தான் எனக்கு தெரியும். இறந்த போன கலியமூர்த்தியின் நேரடி வாரிசான அசலாம்பாளை இந்த வழக்கில் சேர்ப்பதற்கு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வண்ணக்குடியில் தான் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் எனது வீட்டிற்கும் இடையே உள்ள தூரம் 30 அடி இருக்கும். எங்கள் ஊரில் உள்ள சொத்துக்களை பதிய வேண்டும் என்றால் திருவிடைமருதூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் தான் பதிய வேண்டும். வண்ணக்குடிக்கும், திருவிடைமருதூருக்கும் இடையே உள்ள தூரம் 2 கிமீ இருக்கும். உயலில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளவர்கள் எனக்கு உறவினர்கள் அல்ல. உயில் எழுதும் போது கலியமூர்த்தி நல்ல மனநிலையில் இருந்தாரா என்று எனக்கு தெரியாது. இந்த உயிலை என்னுடைய

**அத்தை அசலாம்பாள் தான் வைத்திருந்தார். கலியமூர்த்தி இறந்த பிறகு இந்த உயிலை நான் தான் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. உயிலில் உள்ள கைரேகை கலியமூர்த்தியின் கைரேகை அல்ல என்றால் சரியல்ல. உண்மையிலேயே கலியமூர்த்தி உயில் எழுதி வைத்திருந்தால் 2 கிமீ அருகில் உள்ள திருவிடைமருதூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் அந்த உயிலை பதிவு செய்து வைத்திருப்பார் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தை எனக்கு கொடுத்த அசலாம்பாளை இந்த மனுவில் விசாரிக்க தயாராக உள்ளேன். நான் கலியமூர்த்தி எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயிலின் அடிப்படையில் நான் வாரிசு ஆகமுடியாது என்றால் சரியல்ல. நான் கலியமூர்த்தியின் கூட்டு பங்குதாரர் இல்லை என்றால் சரியல்ல.**

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

**/உண்மை நகல்/**
ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.